# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2006/45 - 2017 පෙබරවාරි මස 17 වැනි සිකුරාදා - 2017.02.17

*2006/45 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 9/2016*

***2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க,தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்***

*2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின்கீழ் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*(வைத்திய கலாநிதி) ராஜித சேனாரத்ன,*
*சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர்.*

கொழும்பு,
*2017, பெப்புருவரி 17.*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மருத்துவ உபகரணங்கள் விலை குறித்தல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* உற்பத்தியாளர், இறக்குமதியாளர், விநியோகிப்பாளர், வியாபாரி, மருந்தாளர் எவரும் அல்லது தனியார் மருத்துவ நிறுவனம் உள்ளடங்கலாக ஏதேனுமொரு மருத்துவ நிறுவனம் அல்லது மருத்துவ உபகரணங்களை உடைமையில் கொண்டுள்ள ஆள் எவரும், வணிகப் பெயரினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெயரினால் விபரிக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையின் II ஆம் நிரலில் எடுத்துக் காட்டப்பட்டதுமான ஏதேனும் மருத்துவ உபகரணத்தை அதன் IV ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய சில்லறை விலைக்கு (ஆ.கூ.சி.வி) அதிகமாக விற்றலோ, விற்பனைக்கு முனைதலோ அல்லது விதிப்பனவு செய்தலோ ஆகாது.

*3.* இதற்கான அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டதும் அதனது வணிகப் பெயரினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெயரினால் விபரிக்கப்பட்டதுமான ஏதேனும் மருத்துவ உபகரணத்தை விற்பனை செய்கின்ற அல்லது விற்பனை செய்வதற்கு முனைகின்ற அல்லது அதற்கு கட்டணத்தை விதிக்கின்ற 2 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் அல்லது நிறுவனம் ஒவ்வொன்றும் அத்தகைய மருத்துவ உபகரணத்தின் வணிகப்பெயர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெயர் மற்றும் விலை என்பவற்றை தெளிவாக சுட்டிக்காட்டுகின்ற பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

4. விற்பனைக்காக உற்பத்தி செய்யப்பட்ட அல்லது கிடைக்ககூடியதான இருப்பிலுள்ள இயைபான மருத்துவ உபகரணத்தின் ஒவ்வொரு இனத்தின் அலகு தொடர்பில் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டவாறு இயைபான ஆகக்கூடிய சில்லறை விலை இவ்வொழுங்குவிதிகளின் வெளியீட்டுத் தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட் காலப் பகுதி முடிவுறுவதற்கு முன்னர் உகந்த வரை விரைவாக அவற்றின் முறையே வர்த்தகப் பொதியிடுகையில் அல்லது சுட்டுத்துண்டிடுகையில் அச்சிடப்படுதல் வேண்டும் அல்லது அடையாளமிடப்படுதல் வேண்டும்.

5. இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் உற்பத்தியாளர், இறக்குமதியாளர், விநியோகிப்பாளர், வியாபாரி, மருந்தாளர் அல்லது தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட ஒரு மருத்துவ நிறுவனம் அல்லது அத்தகைய மருத்துவ உபகரணங்களை உடைமையில் கொண்டுள்ள ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டும் என்பதுடன், 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் IV ஆம் பாகத்தின் கீழ் விளங்கப்படற்பாலராதல் வேண்டும்.

6. இதற்கான அட்டவணையில் தரப்பட்ட மருத்துவ உபகரணங்களின் ஆகக் கூடிய சில்லறை விலையை ஒவ்வொரு சில்லறை விற்பனை நிலையத்தில் காட்சிப்படுத்துவது ஒவ்வொரு உற்பத்தியாளரதும், விநியோகிப்பாளரதும், வியாபாரியினதும், இறக்குமதியாளரதும், மருந்தாளரதும், தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட்ட ஒரு மருத்துவ நிறுவனத்தினதும் அத்துடன் அத்தகைய மருத்துவ உபகரணங்களை உடைமையில் கொண்டுள்ள ஆள் ஒருவரினதும் கடமையாதல் வேண்டும்.

7. "தனியார் மருத்துவ நிறுவனம்" என்பது 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 20 ஆம் பிரிவிலுள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## அட்டவணை

### கண்வில்லைகள் /டெலிவரி சிஸ்டத்துடன் கூடிய வில்லைகள் (பிறிலோடட் /காட்ரிச்சுடன் வழங்கப்பட்டவை)

| நிரல் I | நிரல் II<br>வணிகப் பெயர்/அங்கீகரிக்கப்பட்ட பெயர் | நிரல் III<br>உற்பத்தியாளர் | நிரல் IV<br>ஆ. கூ. சி. வி<br>(இலங்கை ரூபாவில்) |
|---|---|---|---|
| 1 | அக்கிறிசேர்ட் பிறிலோடட் டெலிவரி சிஸ்டம் | அல்கொன் | 17,000.00 |
| 2 | அக்கிறிசொப் IQ SN60WF காட்றிச்சுடன் | அல்கொன் | 16,400.00 |
| 3 | டெக்னிஸ் I பீஸ் | அபொட் மெடிக்கல் | 16,200.00 |
| 4 | என்விஸ்டா | போஷ் மற்றும் லொம்ப் | 15,500.00 |
| 5 | டெக்னிஸ் மொனோபோக்கல் | அபொட் மெடிக்கல் | 15,500.00 |
| 6 | ஹோயா ஐசேர்ட் 251 | ஹோயா | 12,100.00 |
| 7 | நிடெக் நெக்ஸ்-லோட் சிஸ்டம் SP SZ-1 | நிடெக் | 11,750.00 |
| 8 | அக்குவாசென்ஸ் ஆரிஸ் | அறன் சயன்டிபிக் | 9,800.00 |
| 9 | பைபிளக்ஸ் HB (877FABY ஸ்டான்டெட் IOL) | மெடிக்கொன்டோ | 8,900.00 |
| 10 | பனி HP | ஹனிட்டாமார்க்கடிங் | 8,700.00 |
| 11 | I- ஸ்டிரீம் பிறிலோடட் | MD டெக் | 7,100.00 |
| 12 | ஓரோவியு EV | ஒரோலப் | 4,950.00 |
| 13 | அக்றிசொப் SP SA60AT காட்றிச்சுடன் | அல்கொன் | 13,100.00 |
| 14 | அக்றிசொப் எகஸ்பான்ட் MA60MA காட்றிச்சுடன் | அல்கொன் | 13,100.00 |
| 15 | சென்சர் I பீஸ் | அபொட் மெடிக்கல் | 12,800.00 |
| 16 | சென்சர் | அபொட் மெடிக்கல் | 11,750.00 |
| 17 | அக்றிசொப் MP MA60AC | அல்கொன் | 11,150.00 |
| 18 | ஹோயா PY 60R | ஹோயா | 7,900.00 |
| 19 | அக்றிவா UD (புளூபில்டர்) | VSY பயோடெக் | 6,900.00 |
| 20 | சுப்றாபொப் பிறிலோடட் சிஸ்டம் | அப்பாசாமி | 6,500.00 |
| 21 | அக்றிவா UD | VSY பயோடெக் | 6,500.00 |
| 22 | அக்றியோஸ் - M160 | போஷ் மற்றும் லொம்ப் | 14,800.00 |
| 23 | அக்றியோஸ் AO | போஷ் மற்றும் லொம்ப் | 11,600.00 |
| 24 | அக்றியோஸ் அடப்ற் | போஷ் மற்றும் லொம்ப் | 10,850.00 |
| 25 | பனி AFM | ஹனிட்டா மார்க்கடிங் | 10,600.00 |
| 26 | CT அஸ்பினா 404 | கார்ல் செய்ஸ் மெடிடெக் | 10,500.00 |

(தொடர்ச்சி)

| நிரல் I | நிரல் II<br>வணிகப் பெயர்/அங்கீகரிக்கப்பட்ட பெயர் | நிரல் III<br>உற்பத்தியாளர் | நிரல் IV<br>ஆ. கூ. சி. வி<br>(இலங்கை ரூபாவில்) |
|---|---|---|---|
| 27 | CT செபரிஸ் 204 | கார்ல் செய்ஸ் மெடிடெக் | 8,200.00 |
| 28 | பனி AF | ஹனிட்டா மார்க்கடிங் | 7,200.00 |
| 29 | C- பிளெக்ஸ் அஸ்பெறிக் 970C/ 920H | றெய்னர் | 6,000.00 |
| 30 | அஸ்பிறா - aAY | ஹியூமன் ஒப்டிக்ஸ் | 5,700.00 |
| 31 | ஒகியுவா | VSY பயோடெக் | 4,000.00 |
| 32 | ஓரோபிலெக்ஸ் | ஒரோலப் | 1,800.00 |
| 33 | சீலென்ஸ் | ஹனிட்டா மார்க்கடிங் | 6,200.00 |
| 34 | C- பிளெக்ஸ் IOL (ஸ்பெறிகல் 570C) | றெய்னர் | 5,100.00 |
| 35 | அஸ்பிறா AS | ஹியூமன் ஒப்டிக்ஸ் | 5,200.00 |
| 36 | டெக்சொப்ற் டெற்றா | பிரட்ஹொல்லொவ்ஸ் | 4,800.00 |
| 37 | டெக்சொப்ற் பிலெக்ஸ் | பிரட்ஹொல்லொவ்ஸ் | 4,500.00 |
| 38 | அக்றிபோல்ட் | அப்பாசாமி | 3,000.00 |

3-162

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.